தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4032, Homebush NSW 2140

www.tsch.org.au **info@tsch.org.au**

அரையாண்டுப் பரீட்சை 2025

ஆண்டு: 6 **திகதி**: 21.06.2025

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி தேவரதி குலராஜா
உதவி: திருமதி ஜனனி எலியேசர்

மாணவர் பெயர்: _____

வினாக்கள்	**வினா புள்ளி**	**பெற்ற புள்ளி**
வினா 1	20	
வினா 2	10	
வினா 3	20	
வினா 4	15	
வினா 5	15	
வினா 6	20	
மொத்தப் புள்ளிகள்	**100**	

வினா இல	1	புள்ளிகள்	20	பக்கம்	2

1. பின்வரும் இரு உரைப்பகுதிகளையும் வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கும் பூரண விடை தாருங்கள்.

1.1 இசைக்கருவிகள்

இசைக்கருவிகள் தோல்வாத்தியங்கள், துளைவாத்தியங்கள், நரம்புவாத்தியங்கள் என மூன்று வகைப்படும். தவில் (மேளம்), மிருதங்கம், தபேலா போன்றன தோல் வாத்தியங்கள். புல்லாங்குழல், நாதஸ்வரம் போன்றன துளை வாத்தியங்களாகும். வீணை, வயலின் போன்றன நரம்பு வாத்தியங்களாகும்.

1. இசைக்கருவிகள் எத்தனை வகைப்படும்?

_____

2. தோல் வாத்தியங்கள் இரண்டின் பெயர் தருக.

_____

3. துளை வாத்தியங்கள் இரண்டின் பெயர் தருக.

_____

4. நரம்பு வாத்தியங்கள் இரண்டின் பெயர் தருக.

_____

5. உமக்குப் பிடித்த வாத்தியக் கருவி ஒன்றின் பெயர் தருக.

_____

1.2 தூங்கும் விதம்

ஒட்டகச்சிவிங்கி நின்று கொண்டே தூங்கும், உயரே வெளவால் தலைகீழாய்த் தொங்கித் தூங்கிடும். சிட்டுக்குருவி மரத்தின் கிளையைப் பற்றித் தூங்கும். சின்னப்பாப்பா தொட்டிலில் படுத்துத் தூங்கும். கண்ணைமூடி நாம் எல்லோரும் நன்கு தூங்குவோம். கண்ணைத் திறந்தபடியே பாம்பும், மீனும் தூங்கிடும். என்ன காரணத்தினாலே என்று தெரியுமா?

இவைகளுக்கு கண்ணைமூட இமைகள் இல்லையே!!

6. ஒட்டகச்சிவிங்கி எப்படித் தூங்கும்?

_____

7. தலைகீழாகத் தொங்கித் தூங்கும் பிராணி எது?

_____

8. தொட்டிலுக்குள் படுத்துத் தூங்குபவர் யார்?

_____

9. கண்ணைத் திறந்தபடி தூங்கும் பிராணிகள் இரண்டின் பெயர் தருக.

_____

_____

10. தூக்கம் என்பதன் எதிர்ப்பதம் ஒன்று தருக.

_____

(10 x 2 = 20 புள்ளிகள்)

வினா இல	2	புள்ளிகள்	10	பக்கம்	3

பின்வரும் வினாக்களுக்கு விடை தாருங்கள்.

1. அரசன் குடிமக்களை சந்தித்தான். என்ற வாக்கியத்தின் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் காண்க.

   எழுவாய் :_____

   பயனிலை :_____

   செயப்படு பொருள் :_____

2. **கிளிக்கூடு** என்ற சொல்லைப் பிரித்து எழுதுங்கள்.

   _____

3. **புத்தகம் + பை** சேர்த்து எழுதுங்கள்.

   _____

4. அம்மா கோவிலுக்குப் <u>போனார்</u>.
   போனார் என்ற சொல்லின் நிகழ்காலம், எதிர்காலம் காண்க.

   நிகழ்காலம் :_____

   எதிர்காலம் :_____

5. **தாய்** என்ற சொல்லுக்கு ஒத்த சொல் தருக.

   _____

6. **ஆகாயம்** என்பதற்கு ஒத்த சொல் தருக.

   _____

7. சூரியன் காலையில் உதித்து, _____ மறையும்.

வினா இல	3	புள்ளிகள்	20	பக்கம்	4



இங்கே நீங்கள் படத்தில் ஒரு பாடசாலையைக் காண்கிறீர்கள். இப் பாடசாலையைப் பற்றி ஐந்து வசனங்கள் எழுதுங்கள்.

ஒவ்வொரு வசனமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. _____

_____

2. _____

_____

3. _____

_____

4. _____

_____

5. _____

_____

(5 x 4 = 20 புள்ளிகள்)

வினா இல	4	புள்ளிகள்	15	பக்கம்	5

அவுஸ்திரேலியாவின் தேசியமிருகம் கங்காரு பற்றி வேறு நாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் ஒருவருக்கு 50 சொற்களுக்குக் குறையாது கடிதம் எழுதுங்கள்.

வினா இல	5	புள்ளிகள்	15	பக்கம்	6

தொடங்கப்பட்ட கீழே உள்ள கதையை 50 சொற்களுக்குக் குறையாது உங்கள் கற்பனையில் எழுதிமுடியுங்கள்.

இவ்வருடம் எமது தமிழ்ப் பாடசாலைக் கலைவிழாவில் பாடற்குழு, நாடகம் என்பவற்றில் பங்குகொள்ள நான் திறமையாக பயிற்சி செய்தேன். கலைவிழா 10.05.2025 அன்று 2:30 மணிக்கு ஆரம்பமாக இருந்தது. அன்று நானும், எனது பெற்றோரும் கலாசார உடை அணிந்து மிகவும் மகிழ்ச்சியாக பி.ப. 1:30 மணிக்கு வீட்டில் இருந்து மோட்டார் வண்டியில் புறப்பட்டோம். வீதியில் வாகன நெரிசல் அதிகமாக இருந்தது. மண்டபத்தை அண்மித்த வேளையில் எமது மோட்டார் வாகனம் திடீரென இயங்க மறுத்தது. நேரம் போகிறது. எனக்கு மிகவும் பதட்டமாக இருக்கிறது. . . . . .

வினா இல	6	புள்ளிகள்	20	பக்கம்	7

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

1. உழவர் திருநாள் (தைப்பொங்கல்)
2. அன்னையர் தினம்
3. தமிழ்ப் பாடசாலைக் கலைவிழா
4. கல்வி